## R 5307 (page 269)

# பொறாமையும் பகையும் தண்டிக்கப்படும்

## JEALOUSY AND ENVY PUNISHED

### எண்ணாகமம் : 12

"அன்புக்கு பொறாமையில்லை, அன்பு தன்னை புகழாது, இறுமாப்பாய் இராது, அயோக்கியமானதை செய்யாது. " - ( 1 கொரிந்தியர் 13)

பரிசுத்த பவுல், சாத்தான் மற்றும் மாம்சத்தின் கிரியைகளின் தனது கணக்கீடுகளில் பகை, பொறாமையோடு கூட கோபம், வன்மம், பகைகள் மற்றும் சண்டைகளையும் சேர்க்கிறார். பிசாசின் இந்த கிரியைகள் சாத்தானின் குணட்சணங்கள். வேதாகம பதிவின்படி சாத்தானின் இலட்சியம் சர்வ வல்லவரை பகைக்க வழி நடத்தி, முடிவாக, யேகோவாவின் பரலோக ராஜ்யத்திற்கு போட்டி அரசாட்சியை, மனிதர்களை தனக்கு கீழாகக் கொண்டு பூமியில் ஸ்தாபிக்க முயற்சித்தான். அவனது இலட்சியம், சுயநலம் மற்றும் பொறாமைக்கு வழி நடத்தியதோடு, நமது முதல் பெற்றோர்களை வஞ்சிக்கும்படியாக தெய்வீக குணலட்சணத்தை தவறாக சித்தரிக்க வழி நடத்தியது.

மாம்சத்தின் கிரியைகள் கெட்ட பண்புகளாக குறிப்பிடப்பட்டிருக்கின்றன. நமது இனம் சாத்தானால் நஞ்சூட்டப்பட்டு தெய்வீக தண்டனையின் கீழாக வந்திருந்தது. சாத்தான் தீய விருப்பங்கள், தீய கிரியைகளின் ஒவ்வொரு வகையையும் ஊக்க மூட்டினான். மென்மேலும் நமது இனம் இந்த பாதகமான செல்வாக்குகளின் கீழாக வந்திருக்கின்றன. அவை பலவீனமுள்ளதாகவும், சாகக்கூடியதாகவும் சமநிலையற்றதாகவும் ஆகியிருக்கின்றன.

தெய்வீக அங்கீகாரம் பெற்றிருக்கிற நம்மில் கிரியை செய்கிற தேவ சாயலுக்கு அதிகமதிகமாக கொண்டு செல்லுகிற தெய்வீக குணலட்சணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், சாத்தானின் குணலட்சணங்களை களைந்து போட வேண்டும் என்றும் பரிசுத்த பவுல் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரையும் தூண்டுகிறார். இவைகள் சாந்தம், தயவு, சமாதானம், நீடிய பொறுமை, சகோதர அன்பு மற்றும் அன்பு ஆகியவை. பரலோக மகிமையின் உயர்ந்த தளத்தில் தேவனுடைய பரிசுத்த ஜனங்களாக முடிவாக ஆகக்கூடியவர்கள், இந்த குணங்கள் நன்கு அபிவிருத்தி அடைந்தவர்களாகவும் ஆதிக்கம் செலுத்தக்கூடியவர்களாகவும் இருப்பார்கள் என்று நாம் உறுதியளிக்கப்படுகிறோம். இப்படிப்பட்டவர்களுக்கு நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் பரிபூரணமாக அளிக்கப்படும் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். (2 பேதுரு 1:11)

அந்த ராஜ்யம் இரட்சிக்கப்பட்ட மனுக்குலம் முழுவதையும் குறிக்காது. ஆனால் பூமியின் சகல வம்சங்களுக்கும் இரட்சிப்பை ஏற்படுத்தப்போகிற தெய்வீக நிறுவனமாக இருக்கும். எனினும் இப்படிப்பட்ட இரட்சிப்பு மட்டுமே இப்பொழுது திறந்திருக்கிறது. பரிந்துரைக்கப்பட்ட இந்த மார்க்கத்தை பின்பற்றுவதினாலும், இந்த பல்வேறு குணலட்சணங்களை வளர்ப்பதினால் மட்டுமே, யாரும் இதற்கு தகுதியாக முடியும் அல்லது நித்திய ராஜ்யத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். இப்படியாக ராஜ்யத்தின் சகல அங்கங்களும், பரிசுத்த பவுல் அறிவிப்பது போல நமது இரட்சகராகிய தேவனுடைய

பிரியமுள்ள குமாரனின் சாயலுக்கு ஒப்பாக வேண்டும். மாம்சத்தில் அல்ல, நமது நோக்கத்திலும் இருதயத்திலும் சாயலாக வேண்டும். இது மாம்சத்தில் கிட்டத்தட்ட பூரணத்தையும், முடிந்தவரை தெய்வீக தேவைகளுக்கு இணக்கமாகவும் இருக்கக்கூடிய நிலைமையை அர்த்தப்படுத்துகிறது.

நித்திய ஜீவனையும் தெய்வீக கிருபையையும், பூமிக்குரிய தளத்தில் மானிட சரீரத்தில் அடையப் போகிறவர்கள், பாவம் மற்றும் சாத்தானின் ஆவிக்குரியதாக தோன்றுகிற அனைத்தையும் நீக்கிப் போட வேண்டும் என்று உண்மையிலேயே வேதாகமம் தெளிவாக போதிக்கிறது. அதாவது ஆதாம் பாவம் பண்ணுவதற்கு முன்பு ஆதாமில் காட்டப்பட்ட ஆதி தேவ சாயலையும் தேவரூபத்தையும் அவர்கள் மறுபடியும் இப்படியாக பெற வேண்டும்.

**R5308 : page 269**

## மிரியாமின் பொறாமையும் பகையும்

இன்றைய வேதாகம பாடம் மோசேக்கு மூத்தவர்களாகிய அவரது மூத்த சகோதரன் ஆரோன் மற்றும் மூத்த சகோதரி மிரியாமின் தீவிரமான தவறைப் பற்றி நமக்கு கூறுகிறது. இருவரும் இந்த பாவத்தில் பங்கு பெற்ற போது மிரியாமின் பங்கு அதிகம் என்பதை தீர்மானிக்கலாம். இந்த கருத்து இந்த பாடத்தின் முடிவின் படி முழுவதுமாக நியாயமாக இருக்கிறது. தேவனுடைய தண்டனை மிரியாம் மேல் இருந்தது. ஆரோன் மேல் இல்லையென்று இது காண்பிக்கிறது.

இந்த காரியம் குடும்ப கவுரவத்தினால் ஆரம்பித்தது. மோசே எத்தியோப்பிய ஸ்திரீயை விவாகம் பண்ணியிருந்தார். இது அவர் மீதியான் தேசத்தில் விவாகம் பண்ணியிருந்த முதல் மனைவியா என்பதை நாம் அறியோம். இஸ்ரயேலர்கள் கானானுக்கு போகும்படியான பிரயாணத்தில் அவள் இப்பொழுதுதான் சேர்ந்திருந்தாள். சிலர் மோசேயின் முதல் மனைவி இறந்துவிட்டாள் என்றும் சிப்போராள் அவரது இரண்டாவது மனைவி என்றும் கருதுகிறார்கள். இவள் எந்த மனைவி என்பது முக்கியமல்ல. அவள் இஸ்ரயேலரின் கூடாரத்தில் மோசேயுடன் வாழ வந்திருந்தாள் என்பது உண்மை. இப்படியாக அவள் மகா பெரிய தலைவர் மோசேயின் மனைவியாக நாட்டின் முதல் பெண்மணியாக ஆனாள்.

இதற்கு முன்னதாக மிரியாம், தேசத்தின் முதல் பெண்மணியாக இருந்தாள். அவள் தனது நிலைமையை இழந்ததையும் அவளது செல்வாக்கும் சென்றதையும் அவள் உணர்ந்தது இயற்கையானதே. அது புறஜாதியிலிருந்து வந்த தனது தம்பி மனைவியானவள்மேல் பிரதிபலித்தது. இந்த உண்மை மிரியாமுக்கு மதத்தின் பேரால் பொறாமையை ஏற்படுத்தியது. அது தனது தம்பி மனைவியின் பேரில் உள்ள பொறாமையினால் அல்ல என்று தனக்குத்தானே காரணம் கற்பித்துக்கொண்டு தனக்குத் தானே நம்ப வைத்துக்கொண்டாள். அது உயர்ந்த நீதிமுறைமையின் மேல், தேவனுடைய கனத்தின்மேல், இஸ்ரயேல் தேசத்தின் கனத்தின்மேல், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆபிரகாமின் எதிர்கால சந்ததியின் மேல் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நினைத்தாள்.

மோசே குழந்தையாக இருந்த போது, ஒரு கூடையில் புதரில் நைல் நதியில் வைக்கப்பட்ட போது, பார்வோனின் மகள் குளிக்க வரும்போது கவனித்துக்கொண்டிருந்த, சிறு பெண்ணாயிருந்த அதே மிரியாம்தான் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். குழந்தை மோசேக்கு வளர்ப்புத் தாயாக இருக்கும்படி தனது தாயையே அழைத்துக் கொண்டு வந்த அதே மிரியாம் தான். இதே மிரியாம் ஆரோனுடன் சேர்ந்து கர்த்தரின் வழி நடத்துதலின்கீழ்

இஸ்ரயேலின் காரியங்கள் அனைத்திலும் மோசேயின் முழு நம்பிக்கையை அனுபவித்தாள். இதே மிரியாம் தான் கர்த்தரால் தீர்க்கதரிசியானவளாக அங்கீகரிக்கப்-பட்டிருந்தாள். இஸ்ரயேலர்கள் செங்கடலை கடந்த பிறகு, எகிப்திய ராணுவம் அழிக்கப்பட்ட பிறகு இஸ்ரயேலிய ஸ்தீரிகளை தன் தம்புரோடு வெற்றிப் பாடலில் வழி நடத்தியவள் இந்த மிரியாம் தான்.

இப்படியாக மிரியாமின் பொறாமைக்கு மன்னிப்பு கேட்பது நியாயமானதாக காணப்படலாம். நல்லதோ, கெட்டதோ, எந்த பொறாமையையும் உண்மையிலேயே கற்பனை செய்யக்கூடாது. அதற்காக மன்னிப்பும் காணப்படாது. நல்ல மனிதர்கள் பொறாமை, பகை முதலானவைகளுக்கு இடங்கொடுக்க மாட்டார்கள். விநோதமான சூழ்நிலையில் அவர்களை நியாயப்படுத்த நினைத்து ஏதோ ஒரு வகையில் தங்களை ஈடுபடுத்துகின்றனர்.

தனது சகோதரன் தனது மார்க்கத்தில் அறிவீனமாக இருக்கிறான் என்று சிறிதளவு நினைத்து மிரியாம், தன்னுடன் ஏற்பட்ட பிரிவினையினிமித்தம் மோசேயை தேவன் தம்முடைய ஊழியத்தில் ஈடுபடுத்த நினைக்க மாட்டார் என்று அதிகமதிகமாக தன்னை சமாதானப்படுத்திக் கொண்டாள். அவளது கேடுண்டான மனது, மோசேயை தேவன் கை விட்டுவிட்டார், இல்லையென்றால், அவள் பெரிய தவறு என்று நினைத்துக் கொண்டிருக்கிற காரியத்தில் விழுந்திருக்கமாட்டார் என்பதற்கான ரூபகாரங்களை காண ஆரம்பித்தது. தன்னுடைய பயத்தை ஆரோனிடம் அவள் கூறினாள். இருவரும் இஸ்ரயேலின் தலைவன் விழுந்துபோன வருத்தத்தைக் குறித்து சிந்தித்து, ஜெபித்து, மோசேயின் விலகலினால் பொறுப்பு அவர்கள் மேல் விழுந்ததையும் உணர்ந்தார்கள்.

**R5308 : page 270**

ஆரோன் வெளிப்படையாக பலவீன குணலட்சணமுடையவனாயிருந்து, மோசேக்கு வாயாகவும் உதவியாகவும் மட்டுமே இருந்தார். மோசே இல்லாத சமயத்தில், அவர் மலையில் இருந்த போது, பொறுப்பு ஆரோனிடம் இருந்த போது, இஸ்ரயேல் ஜனங்களின் தூண்டுதலின் பேரில் பொன் கன்றுக்குட்டியை, விக்கிர ஆராதனையை ஏற்படுத்தினது போல, இந்த முறையும் தனது பலவீனத்தை காண்பித்தார். மிரியாமும் கூட, கலக ஆவியுடைய ஜனங்களை திருப்திப்படுத்த அந்த சமயத்தில் ஒப்புதல் அளித்தாள்.

மிரியாம் தனது தேச துரோக யோசனைகளை ஆரோனும் இதே எண்ணத்தை கொண்டிருக்கிறார் என்று இஸ்ரயேலின் பாளையம் முழுவதும் பரப்பினாள் என்று இந்த மூலவாக்கியம் குறிப்பிடுகிறது. மோசே மட்டுமே தேசத்திற்கு தலைவரல்ல, மோசேயைப் போல மிரியாமும் ஆரோனும் கூட தலைவர்கள் தான் என்பதை ஏற்றுக்கொள்ளுவதற்கு ஜனங்களை தயார்படுத்தி, கர்த்தருக்கும் உதவி பண்ண வேண்டும் என்று எண்ணங்கொண்டார்கள். நயவஞ்சகமாக ஜனங்களை தயார்படுத்துவது, தேவன் மோசேயை முழுவதுமாக தள்ளிவிட்டு, ஆரோனை வாயாகக் கொண்டு மிரியாமிடமே முழுவதுமாக பேசக்கூடிய நேரத்தை கொண்டு வரும் என்று நினைத்தாள்.

## கர்த்தர் அதை கேட்டார்

கர்த்தர் தமது வேலையில் கவனக்குறைவாக இல்லை என்பதை கர்த்தருடைய பிள்ளைகளும் மற்றவர்களும் அடிக்கடி மறக்கின்றனர். அவரது விருப்பத்தின் நிமித்தம், அவர் தமது சொந்த சித்தத்தின் ஆலோசனைப்படி சகல காரியங்களையும் செய்து கொண்டிருக்கிறார். வேத மாணவர்களாக நாம் இந்த மாபெரும் உண்மையை அதிகமதிகமாக உணர்ந்து கொள்ள வேண்டும். மேலும் கர்த்தருடைய வேலையில்

செழிப்பானது வல்லமையினாலோ அல்லது மனித சக்தியினாலோ அல்லது தந்திரத்தினாலோ வராது. ஆனால் கர்த்தருடைய ஆவி, கர்த்தரின் வல்லமை, கர்த்தரின் சித்தத்திற்கு இசைவாகவும் அதன் மூலமாகவும் வரும் என்பதை நாம் நினைவு கூர வேண்டும்.

இந்த சதியை முளையிலேயே கிள்ளி எறிய கர்த்தர் உடனே மோசே, ஆரோன் மற்றும் மிரியாமை ஆசாரிப்புக் கூடாரத்துக்கு முன்னே தன்னுடைய பிரசன்னத்திற்குள் வரும்படி அழைத்தார். மூவரும் உடனே அழைப்பாணைக்கு கீழ்ப்படிந்து வந்தார்கள். கர்த்தர் மோசேயை நீக்கி விட்டு தன்னை தலைமையாக நியமிக்கக் கூடிய நேரம் வந்தது என்று மிரியாம் நினைத்தாள். ஆனால் இறுதி முடிவு மிகவும் வேறாக இருந்தது. ஆரோனும் மிரியாமும் சில காலம் உண்மையிலேயே தீர்க்கதரிசிகளாக இருந்தார்கள் என்றும், அவர்களை பயன்படுத்துவதில் சந்தோஷப்பட்டார் என்றும் தேவன் கூறினார்; ஆனால் மோசேயுடன் அவர் வைத்திருந்த தொடர்பு மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தது என்றும் அறிவித்தார். அவர் மோசேயுடன் கனவு மூலமாகவோ, காட்சி மூலமாகவோ பேசாமல் நேரடியாக பிரதியட்சமாக பேசினதாக கூறினார். இப்படியாக பொறாமை, பகை மற்றும் சதித்திட்டம் மற்றும் தீங்கு பேசுதல் யாவற்றையும் தேவன் ஒதுக்கி வைத்தார்.

எனினும் கூடுதலாக தேவன் ஒரு தண்டனையை கொடுத்தார். மேக ஸ்தம்பத்தில் தெய்வீக பிரசன்னம் அவர்களை விட்டு நீங்கியது. தங்கள் சகோதரி மிரியாம் குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டதை மோசேயும் ஆரோனும் கண்டார்கள். இதெல்லாம் தான் பாவ வழியில் மிரியாமுக்கு உதவியதை இது உணர்த்தியது என்பதை ஆரோன் உணர்ந்து கொண்டான். தனது சகோதரன் மோசே தான் உண்மையிலேயே ஜனங்களுடைய தலைவன் என்பதை உணர்ந்து கொண்டான். ஆரோன் மோசேயை நோக்கி: “ஆ, என் ஆண்டவனே, நாங்கள் புத்தியீனமாய் செய்த இந்த பாவத்தை சுமத்தாதிரும். அவள் செத்து விழுந்த பிள்ளையைப் போல ஆகாதிருப்பாளாக என்றான்.”

பிறகு மோசே கர்த்தரை நோக்கி, “என் தேவனே, அவளை குணமாக்கு” என்று கெஞ்சினான். தேவன் மோசேயின் வேண்டுதலைக் கேட்டு, அவளை சொஸ்தப்படுத்தினார். ஆனால் மற்றவர்களுக்கு குஷ்டரோகம் வந்து, சுகமாகும் போது செய்ய வேண்டிய முறைமைகளின்படி இவளும் செய்ய வேண்டும் என்று கூறினார். அப்படிப்பட்டவர்கள் அனைவரும் ஏழு நாட்கள் பாளையத்துக்கு புறம்பே விலக்கபட்டு இருந்து, மேலும் அந்த வியாதி வராதிருக்கிறதா என்று சோதிக்கப்பட்டு பின்பு சேர்த்து கொள்ளப்பட வேண்டும்.

## “நியாயப்பிரமாணம் ஒரு நிழலாக இருந்தது”

இஸ்ரயேலருக்கு நியாயப்பிரமாணத்தின் மூலம் சொல்லப்பட்ட பல்வேறு காரியங்கள் மேலானவைகளை விளக்குகிற தீர்க்கதரிசன நிழல்கள் என்று அப்போஸ்தலர் நமக்கு விளக்குகிறார். அதாவது ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு மேலானவைகளை விளக்குகிறது என்று கூறுகிறார். உதாரணத்திற்கு, குஷ்டரோகம் தெய்வீக குறுக்கீடு இல்லாமல் சொஸ்தப்படுத்த முடியாத வியாதி. அது பாவத்திற்கு நிழலாக இருந்தது. ஏழு நாட்கள் ஜனங்களிலிருந்து விலக்கி வைக்கப்படுவது, பாவத்தை நீக்கிப் போடுவதற்காக சோதனைக்கான சுத்தப்படுத்துவதற்கான, பிறகு தேவனுடன் இணக்கத்திற்கு வருவதற்கான ஒரு காலமாக இருந்தது.

இன்றைய பாடத்திலிருந்து அநேக காரியங்களை நாம் கற்றுக்கொள்ளலாம். இதில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று, சுயநலத்துக்கு அடிப்படையானது பொறாமை மற்றும் பகை என்பதாகும். அது சகல பாவங்களிலும் வஞ்சகமானது, மற்றவர்கள் என்ன நினைத்தாலும் இது தேவனுடைய பார்வையில் மிகவும் தீவிரமானது.

பரிசுத்த பவுலின் சபைக்கான அறிவுரையில் இந்த வசனம் நமக்கு கொடுக்கப்படுகிறது. சபையானது சுவிசேஷ செய்தி மூலம் மனுக்குலத்திலிருந்து பொதுவாக அழைக்கப்பட்டு, இயேசுவின் சீஷர்களாகவும் அவருடைய உடன் சுதந்தரருமாயிருக்கும்படியான ஒரு விசேஷித்த வகுப்பார் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். அவர்களது அழைப்பு பூமிக்குரிய சகல உரிமைகளையும் இயேசுவுடன் கூட பலியிடவும், தெய்வீக சித்தத்தின் ஏற்பாடுகள் அனைத்திற்கும் தங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுப்பதற்குமாகும். அவர்களது உடன்படிக்கையானது அவர்களது இரட்சகராகிய தலைமைக்கு முற்றிலும் கிறிஸ்துவைப் போல தெய்வீக ஏற்பாடுகள் மற்றும் கொள்கைகள் அனைத்திற்கும் உண்மையுள்ளவர்களாயிருத்தல் ஆகும்.

இது, பிசாசு அல்லது மாம்சீக கிரியைகளுக்கு இடம் கொடுக்காது. இவைகளனைத்தும் தேவனுக்கு பிரியமில்லாதிருப்பதால் நீக்கப்பட வேண்டும், நிராகரிக்கப்பட வேண்டும். மாறாக, பரிசுத்த ஆவியின் கனிகளும் கிருபைகளும் மாற்றாக வைக்கப்பட வேண்டும். இப்படியாக இயேசுவின் சீஷர்கள் அவரைப் போல் முடிவாக தெய்வீக கிருபையின் நிறைவை கனம், மகிமை மற்றும் சாகாமையை, அவரது வலது பாரிசத்தின் சக்தியை அடைய வேண்டும்.

ஆகையால் சகல ஜனங்களும் இருளின் கிரியைகளை எறிந்துவிட முயற்சிக்கவும், ஜீவாதிபதியின் வழி நடத்துதலின் கீழ் தெய்வீக ஏற்பாடுகளுக்கு தங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும் வேண்டியிருக்கும் போது, தேவனிடம் விசேஷமாக அர்ப்பணம் செய்த சபையானது, அவர்களது சகல நம்பிக்கைகளாகிய கனம், மகிமை மற்றும் சாகாமை, தப்பிதங்களை எதிர்ப்பதிலும், நல்ல குணலட்சணங்களை அபிவிருத்தி செய்வதிலும் இணைந்திருக்கின்றன. “அன்புக்கு பொறாமையில்லை; அன்பு தன்னை புகழாது, இறுமாப்பாயிராது; அயோக்கியமானதை செய்யாது” என்பதை நாம் நினைவு கூர வேண்டும். ஆகையால் அன்பானது பொன்னான கற்பனையின் முழு திட்ட அளவையும் தேவனுடைய முழு குணலட்சணத்தையும் குறிக்கிறது; ஏனெனில், “தேவன் அன்பாக இருக்கிறார்.” (1 யோவான் 4:8)

மிரியாமுக்கு கொடுக்கப்பட்ட உடனடியான தண்டனையும் அதன் விளைவும், பாவத்துடனான இப்படிப்பட்ட கையாளுதல் மேசியாவின் ராஜ்யத்தின் கீழ் வழக்கமான ஒழுங்குமுறையாக இருந்து, அதற்கு பலனை உடனடியாக கொண்டு வரும் என்பதை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. பாவம் செய்கிறவர்கள் துன்பப்படுவார்கள் என்பதை சகல மனிதரும் ஓரளவுக்கு உணருகிறார்கள். ஆனால் பாவத்தினிமித்தம் வரும் தண்டனைகளும் அல்லது துன்பங்களும் அதை அனுபவிப்பவர்களால் உணரப்படவில்லை. ஆகையால் அநேகர் அதன் மூலம் பாடத்தை கற்றுக்கொள்ளுவதில்லை.

மேலும் இருண்ட காலத்தின் தப்பறையான போதனைகள் நம்மில் அநேகரை, பாவத்திற்கான தண்டனை நித்திய ஆக்கினை என்று தவறாக சித்தரிக்கிறது. இப்படியாக தேவனுடைய ஏற்பாடுகளை நாம் நேரடியாக மறுத்து, பாவத்திற்கான தற்கால தண்டனையும் சம்பளமுமாகிய காரியங்களிலிருந்து நமது கவனத்தை சிதறப் பண்ணுகிறது. மேலும் எதிர்கால தண்டனையை யாரும் நம்பாததாக, நம்பக்கூடாததாக அபத்தமாக சரியற்றதாக ஆக்குகிறது. மரிக்கும் தருவாயில் பாவ மன்னிப்புக்கான ஜெபம் அவர்களை தண்டனையிலிருந்து முற்றிலுமாக தப்பித்துக் கொள்ளும் படியாக அனுமதிக்கிறது என்று நினைக்கிறார்கள். தெய்வீக ஏற்பாடுகளில் நாம் எந்த முன்னேற்றத்தையும் செய்ய முடியாது. “மனிதன் எதை விதைத்தானோ அதையே அறுப்பான்.” தற்கால வாழ்க்கையிலும் சரி, வரவிருக்கிற வாழ்க்கையிலும் சரி. ஆனால் எந்த பேய்த்தனமும் நித்திய ஆக்கினையும் இருக்ககாது.